**உக்குவெல பிரதேச சபை - 2023**

---------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உக்குவெல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உக்குவெல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே

விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வான்டின் போது ரூபா 629,200 செலவில் பெற்றுக்கொர்ட 14 இரண்டு பக்க புத்தக இராக்கைகளின் பெறுமதி ரூபா 484,000 என ரூபா 145,200 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய நீர் மற்றும் மின்சாரத்திற்காக 2024 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 132,503 தொகை மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | களஞ்சிய இருப்பு புத்தகங்களில் குறிப்பிடப்பட்ட எழுதுகருவிகளின் மொத்தம் ரூபா 368,240 ஆன 7015 அலகுகள் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 03 கணக்கு விடயங்களுக்குரிய மொத்தம் ரூபா 14,267,873 ஆன மீதிகளுக்கு உரிய நிரைலயான சொத்துக்கள் பதிவேடு மற்றும் கேவைகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிபடுத்த முடியாது இருந்தது | தகவல்கள் இனங் காணப்பட்டு 2024 ஆம் ஆண்டில் நாளதுவரை யாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஒவ்வொரு மீதிகளை அட்டவணைகள் உறுதிப்படுத்துவதற் கான பதிவேடுகள் மற்றும் கோவைகளை பேணிச் செல்லப்பட வேண்டும் |

### 1.7 இணங்காமைகள்

---------------------------

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்ககளுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்ககளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) பாராளுமன்ற சட்டங்கள் | | | |
| (i) 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற நிறுவன (நிறைவேற்றப்பட்ட) உபவிதி சட்டத்தின் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தல் தொடர்பான உப விதி கோவையின் 4.(1) பிரிவு | சபை அதிகார பிரதேசத்தில் முச்சக்கர வண்டி நிறுத்தி வைக்க வேண்டிய இடங்கள் மற்றும் ஒவ்வொரு இடத்திலும் நிறுத்தி வைக்கக்கூடிய ஆகக்கூடிய முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | வீதி அபிவிருத்தி அதிகார சபையினதும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரி சபையினதும் பரிந்துரைகள் இல்லாததால் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பது | சட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சிக்கலானதாக | |
| (ii) | **1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்** | | | |
| | 24 ஆம் பிரிவு | 1963 ஆம் ஆண்டில் கிராம சபை வீதிகளாக 696 வீதிகள் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதில் பின்னர் சபைக்கு உரிய வீதிகள் மாற்றப்பட்டமை தொடர்பாக மீண்டும் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதிகளை அளந்து திட்ட வரைபடம் தயாரித்து வர்த்தமானியில் வெளியிட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | சட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | **1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்** | | | |
| | விதி 61 | வியாபார கைத்தொழில்கள் மற்றும் வியாபார அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்றினை மேற்கொண்டு கணிப்பீட்டு அறிக்கையின் தகவல்களின் பிரகாரம் பீ.எஸ் 26 ஏ படிவத்தின் பதிவேடுகளில் குறிப்பிடாமல் அனுமதிப்பத்திர கட்டணங்களை செலுத்தும் சந்தர்ப்பத்தில் பதிவேடுகளுக்கு உட்படுத்தும் முறையற்ற நடைமுறை ஒன்று பின்பற்றப்பட்டு இருந்தது. | P S 26 படிவத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் பதிவேடுகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுப்பதாக | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | **சுற்றறிக்கை** | | | |
| | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 | சபைக்கு சொந்தமான ஓட்ட நிலைமையிலுள்ள 10 வாகனங்கள் 1 முதுல் 12 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக எரிபொருள் எரிவு | எதிர்காலத்தில் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள் வதற்கு | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| ஆம் பிரிவு | பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை | நடவடிக்கைகள் எடுக்க உள்ளதாக |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 14,736,339 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 32,311,455 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 901,000 | 929,923 | 1,124,437 | 255,196 | 2,101,000 | 2,111,813 | 2,425,177 | 449,710 |
| (ii) | வாடகை | 1,300,000 | 2,184,295 | 2,594,072 | 36,940 | 4,000,000 | 1,239,710 | 1,416,971 | 446,717 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 120,000 | 163,950 | 163,950 | - | 1,110,000 | 546,330 | 546,330 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 4,500,000 | 6,394,048 | 5,393,065 | 2,580,547 | 5,000,000 | 3,749,009 | 4,437,448 | 1,579,564 |
| | மொத்தம் | 6,821,000 | 9,672,216 | 9,275,524 | 2,872,683 | 12,211,000 | 7,646,862 | 8,825,926 | 2,475,991 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி** | | |
| (i) | வீதவரி அலகொன்றினல் ரூபா 1,000 இற்கு மேற்பட்ட நிலுவையான 69 ஆதனங் களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 202,636 ஆன வீதவரி கட்டண வருமானத்திலிருந்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 158 ஆம் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவைத் தொகையை மே, ஜூன் மாதங்களில் நடமாடும் சேவை நிகழ்ச்சியை நடத்தி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 25 தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் வீதவரி அலகுகளிலிருந்து 2 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக ரூபா 119,414 ஆன நிலுவை வீத வரிக் கட்டணங்கள் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | அரசின் ஆதனங்களில் இருந்து நிலுவை வீத வரியை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகளை எடுக்கும் இயலுமே இல்லை என்பதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **கடை வாடகை** | | |
| | 2021 திசெம்பர் 15 மற்றும் 2022 நவம்பர் 16 ஆம் திகதிகளில் மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கடை வாடகை அறவிடாமையால் | கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயம் ஒன்றின் பேரில் தாமதம் ஒன்று இடம்பெற்றபோதும் சபைக்கு நட்டமொன்ற இல்லாத வகையில் | மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு வாடகையின் பிரகாரம் கடை வாடகை அறவிடப்பட |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஜனவரி முதல் திசெம்பர் வரையான காலப் பகுதியில் 16 கடைகளில் இருந்து ரூபா 751,500 ஆன கடை வாடகை வருமானம் அன்று அறவிடப்பட்டு இருக்கவில்லை. | வேண்டும் என்றே நடவடிக்கை எடுக்கப்படவில்லை என | வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆதன கடன் வட்டி மீளளிப்பாக சபைக்கு பெறவேண்டிய ரூபா 560,776 தொகையுடன் மீளாய்வாண்டு பெற வேண்டிய 4 கணக்கு மீதிகள் மொத்தம் ரூபா 3,819,059 தொகை அறவிடப்படாமல் இருந்ததுடன் அதில் அறவிடப்படாது காணப்பட்ட 1 ஆண்டிற்கு மேற்பட்ட 5 ஆண்டுகளுக்கு குறைந்த மீதி ரூபா 635,734 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 663,840 ஆக இருந்தது. | ஆதனக் கடனுக்காக அரசினால் ஏற்கப்படும் வட்டி தொகையில் எமக்கு மீளளிக்கப்பட வேண்டிய பணத்தின் கூட்டுத்தொகையாக இருப்பதாகவும் பிரிவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் செலுத்த வேண்டிய 34 அபிவிருத்தி செயற்திட்டங்களின் மொத்தம் 12,853,802 தீர்வு செய்யப்படாமல் இருந்ததுடன் அதில் தீர்வு செய்யப்படாமல் காணப்படும் காலம் 1 ஆண்டுக்கு மேற்பட்டதும் 5 ஆண்டுகளுக்கு குறைந்த மீதி ரூபா 7,685,168 தொகையும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 332,813 ஆக இருந்தது. | எதிர்வரும் காலங்களில் சீராக்க நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மர ஆலை, தச்சு வேலைத்தளம் மற்றும் 05 அரிக்கும் ஆலைகள் என்பவற்றிற்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாமல் இருந்ததுடன் இதன் காரணமாக ரூபா 59,700 கூட்டுத்தொகையான வருமானம் இழக்கப்பட்டு இருந்தது. | தற்போது 5 வியாபாரங்களுக்காக வியாபாரம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் ஒரு வியாபாரம் மூடப்பட்டுள்ளதாக | முறையான கண்காணிப்பின் கீழ் அனுமதிப்பத்திரங்களை வழங்கி கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

---

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை பயன்படுத்தும் பெறுமதி மதிப்பிடப்படாத இருந்த 67 காணிகள் மற்றும் ரூபா 13,756,000 ஆன 11 காணிகளின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | காணிகளின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | காணிகளின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உக்குவெல பிரதேச சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணி தொடர்பான பரிசோதனயின் போது மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 பதவிகளில் 13 வெற்றிடங்களும் 02 பதவிகளில் 11 மிகையும் காணப்பட்டன | இப்பதவிகள் தொடர்பாக மாதாந்த செயலாற்றல் அறிக்கை மூலம் உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |